## இலங்கை தேயிலை சபை
## 574, காலி வீதி, கொழும்பு 03.

### சுருக்கமான வரலாறு

இலங்கை தேயிலை சபை, 1976 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி தேயிலை கட்டுப்பாட்டு திணைக்களம், தேயிலை ஏற்றுமதி ஆணையாளர் திணைக்களம், லங்கா தேயிலை பிரச்சார சபை அத்துடன் இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் ஆகிய நிறுவனங்களை ஒன்றிணைத்தலின் மூலம் 1985 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்கம், 1990 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்கம், 2003 ஆம் ஆண்டு 29 ஆம் இலக்கம், அத்துடன் 2006 ஆம் ஆண்டு 44 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்திய 1975 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க இலங்கை தேயிலை சபையின் சட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது.

1994 ஆம் ஆண்டில் தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் இலங்கை தேயிலை சபை சட்டத்தின் கீழ் விடுவிக்கப்பட்டதோடு அது 1993 ஆம் ஆண்டு 52 ஆம் இலக்க தேயிலை ஆராச்சி சபை சட்டத்தின் கீழாக அமுல்படுத்தப்பட்டது.

குறிப்பிட்ட சட்டத்தின் ஊடாக ஆரம்பிக்கப்பட்ட இலங்கை தேயிலை சபையின் பிரதான நோக்கமாவது இலங்கையில் தேயிலை கைத்தொழிலை அபிவிருத்தி செய்தல், இலங்கையில் தேயிலை உலகம் முழுவதும் பிரபல்யப்படுத்தல். அத்துடன் தேயிலை கைத்தொழிலை முறையான வழிநடத்தல் நிமித்தம் தேவையான ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தலாகும் தேயிலை கைத்தொழிலுக்கு அமைவான முதன்முதலான யாப்பு ரீதியிலான அதிகாரத்துடன் செயற்பாடுகள் ஆவது தேயிலை உற்பத்தி, பயிர்ச் செய்கை அத்துடன் மீண்டும் பயிர்ச் செய்கை, தேயிலை தொழிற்சாலை ஆரம்பித்தல், கொழும்பு தேயிலை ஏலத்தில் கலந்து கொள்ளல், தேயிலைகளின் தரச்சிறப்பு நிலையை, உள்ளடக்குதல் அத்துடன் களஞ்சியப்படுத்தல் வசதியினை ஏற்படுத்திக் கொள்ளல் ஆகியவற்றினிடையே அவை இலங்கை தேயிலை சபை சட்டம் அத்துடன் 1957 ஆம் ஆண்டு 51 ஆம் இலக்கம் தேயிலை சட்டத்தின் 1959 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்கம் தேயிலை (குத்தகை அத்துடன் ஏற்றுமதி கட்டுப்பாடு) சட்டத்தின் மூலம் அதிகாப்பூ ர்வமாக்கப்பட்டுள்ளது

### பிரதான பிரிவு

இலங்கை தேயிலை சபை பிரதான அலுவலகம்
தேயிலை ஆணையாளர் பிரிவு
தேயிலை பிரச்சாரப் பிரிவு
சந்தைப்படுத்தல் அறிவு மற்றும் சொத்து பிரிவு
பகுப்பாய்வு இரசாயனகூடம்
தேயிலை சுவை பரிட்சித்தல் ஒன்றியம்

### நோக்கம்

- எதிர்வரும் 5 ஆண்டு காலத்திற்குள் 2% ம் வருடாந்த சந்தைப்படுத்தல் முன்னேற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளல்
- முறையான விவசாய உற்பத்தி நடவடிக்கையை பின்பற்றியமைக்கான நற்சான்றிதழ்
- 2012 ஆம் ஆண்டு வரையில் மொத்த தேயிலை ஏற்றுமதிகளின் பெறுமதியை அதிகரித்து முடிவுத் தேயிலை அளவு 35% தொடக்கம் 60% அதிகரிப்பதோடு இதற்கு சமமான தேயிலை கிலோகிராம் ஒன்றை கப்பலில் ஏற்றுதல் வரையான பெறப்படுகின்ற வருமானம் (FOB) அ.டொ. 2 தொடக்கம் அ. டொ 4 வரை அதிகரித்தல்
- தற்போதைய சந்தையை பாதுகாத்துக் கொள்ளல் நட்டத்தில் உள்ள சந்தையை இலாபம் பெறும் நிலைமைக்கு ஆளாக்குதல் அத்துடன் புதிய சந்தைக்கான அனுகுமுறையை கையாள்தல்
- தேயிலை கைத்தொழிலுக்கு அமைவான சகல சட்ட விடயங்களையும் மீண்டும் மீளாய்வுக்குட்படுத்தலும் அத்துடன் இலங்கையில் தேயிலை கைத்தொழில் சம்பந்தமாக நடைமுறைப்படுத்தவேண்டிய

அதிகாரப்பூ ர்வமான சட்டம் 1975 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்கம் இலங்கை தேயிலை சபை சட்டமாக்குவதற்கு நடவடிக்கையை மேற்கொள்ளல்

- 2008 ஆம் ஆண்டு வரையில் சந்தை அறிவு மற்றும் சொத்து பிரிவு மிகவும் செயற்பாடுடைய பிரிவாக உருவாக்கதல்.

## செயற்பாடுகள்

- சர்வதேச சந்தைக்கு தரச்சிறப்புடைய தேயிலை வழங்குவதில் தலைமைத்துவத்தை தொடர்ந்து தக்க வைத்துக் கொள்வதற்கு இலங்கையில் தேயிலை ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ள அகில சந்தை அபிவிருத்தியும் ஊக்குவிப்புச் செய்தலும்
- வெளிநாட்டு நுகர்வோரை திருப்தி படுத்தும் வகையில் தேயிலை பயிர்ச்செய்கையாளர் உற்பத்தியாளர் அத்துடன் ஏற்றமதியாளர்களுக்கு பொருளாதார ரீதியில் வசதியற்ற தவிர்ந்த நடைமுறைப்படுத்தக் கூடிய புதிய கிரம உபாயங்களினுள் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளக் கூடிய தரச்சிறப்புடைய நிலையை தக்க வைத்துக் கொள்வதில் கிரமமுறைகளை அறிமுகப்படுத்தல்
- உற்பத்தி அத்துடன் சந்தையை பல்தரப்படுத்தல் நிமித்தம் ஊக்குவிப்பு
- தேயிலை கைத்தொழிலில் தற்காலம் மற்றும் எதிர்கால தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்கு தேவையான சட்ட கட்டமைப்பை விபரித்தல்
- தேயிலை கைத்தொழிலில் பிரயோசனம் நிமித்தம் நாளாந்தம் வழங்க கூடிய அறிவுத் தகவல்களுக்கு இலகுவில் நுழையக்கூடிய வழியினை தயாரித்தல்

## தொடர்பு கொள்ள வேண்டிய நபர்கள்

| பெயர் | தொலைபேசி | தொலைநகல் | மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|
| தலைவர் லலித் ஹெட்டிஆலாச்சி அவர்கள் | 2585701 | 2589132 | chairman@pureceylontea.com |
| பணிப்பாளர் நாயகம் எச் டீ ஹேமரத்ன அவர்கள் | 2508991 | 2589132 | dgsltb@pureceylontea.com |
| தேயிலை ஆணையாளர் வீ ஜே சீ என் உடுகமப்பொல அவர்கள் | 2580182 | 2580161 | teacomm@pureceylontea.com |
| சாதாரண | 2587814<br>2587773<br>2582121 | | |

இணையத்தள முகவரி : www.pureceylontea.com